# கணக்கீடு

**04**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்
## தரம் 12
## முதன்மை ஏடுகள்

1. வரையறுக்கப்பட்ட $ABC$ பொது கம்பனி 2021 ஏப்ரல் மாதத்தில் நடைபெற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு ($VAT$ 8% ஆகும். இந்த எல்லாப் பெறுமதியும் $VAT$ தவிர்த்து கணிக்கப்படுள்ளது.) இந்நிறுவனம் $VAT$க்கு பதிவு செய்த நிறுவனமாகும்.

| | |
|---|---|
| 1 / 1 | அமல் நிறுவனத்தின் இருப்பு 20 அலகுகள் ஒன்று ரூ.2800 வீதம் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. பெற்ற கழிவு 10% ஆகும். |
| 1 / 3 | 2021 மார்ச் மாதத்துடன் தொடர்பான அட்டுறு மின்சாரம் ரூ.36000 செலுத்தப்பட்டது. |
| 1 / 6 | உரிமையாளரால் செலுத்தப்பட்ட மேவதிக மூலதனம் ரூ.100000 |
| 1 / 8 | ராகுல் நிறுவனத்தின் ரூ.60000 க்கு இருப்பு கொள்வனவு செய்யப்பட்டது |
| 1 / 10 | 1 / 1 கொள்வனவு செய்த இருப்பில் 12 அலகுகள் 10% இலாபம் வைத்து அமர என்பவருக்கு விற்பனை செய்யப்பட்டது. |
| 1 / 11 | நிறுவனத்துக்கு கிடைத்த முதலீட்டு வருமானம் ரூ.15000 |
| 1 / 12 | 1 / 8 கொள்வனவு செய்த ரூ.16000 பெறுமதியான இருப்பு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது |
| 1 / 14 | ரூ.20000 பெறுமதியான இருப்பு உடன் காசுக்கு விற்பனை செய்யப்பட்டது |
| 1 / 15 | 1 / 3 செலுத்தப்பட்ட மின்சாரத்துடன் தொடர்பான காசோலை மறுக்கப்பட்டது. |
| 1 / 18 | காசுக்கு கொள்வனவு ரூ.60000 |
| 1 / 19 | 1 / 10 விற்பனை செய்யப்பட்ட இருப்பில் 5 அலகுகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது |
| 1 / 20 | உரிமையாளரின் பொருள் பற்று ரூ.1000 |
| 1 / 21 | கமல் நிறுவனத்தின் ரூ.35000 இருப்பு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது |
| 1 / 22 | மாதத்தினுள் கடன்பட்டோர் தந்த காசு ரூ.10000 |
| 1 / 25 | ஏப்ரல் மாதத்துக்கான கடன் கொடுத்தோர் கொடுப்பனவு ரூ.17800 கழிவு ரூ.200 |

I. இந்த கொடுக்கல் வாங்கல்களை மூல ஏடுகளில் பதிவு செய்க.

II. மாதத்தின் ஆரம்பத்தில் வியாபார செம்மதி, வியாபார வருமதிகளின் கட்டுபாட்டு கணக்கு மீதிகள் முறையே ரூ.10000, ரூ.12500 ஆகும். கட்டுப்பாட்டு கணக்குகளைத் தயாரிக்குக.

2. சமரி 2021.03.01 திகதி காசாக ரூ.600000ம் ரூ.340000க்கு தளபாடத்தையும் ஈடுபடுத்தி வியாபாரமொன்றை ஆரம்பித்தார். அம்மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,

| | | |
|---|---|---|
| 3 / 2 | காசுக்கு கொள்வனவு | ரூ.240000 |
| 3 / 3 | கரீமுக்கு விற்பனை | ரூ.320000 |
| 3 / 4 | உட்திரும்பல் | ரூ.20000 |
| 3 / 5 | வங்கிக்கடன் பெறல் | ரூ.400000 |
| 3 / 6 | சசியிடம் கொள்வனவு | ரூ.100000 |

BUSINESS & COMMERCE BRANCH

| | | |
|---|---|---|
| 3 / 8 | வெளித்திரும்பல் | ரூ.10000 |
| 3 / 9 | காசுக்கு விற்பனை | ரூ.30000 |
| 3 / 10 | சசிக்கு ரூ.54000 செலுத்தியதுடன் கழிவு | ரூ.4000 |
| 3 / 15 | கரீமிடம் பெற்ற காசு ரூ.190000 கழிவு | ரூ.10000 |
| 3 / 20 | ஊழியர் சம்பளம் ரூ.24000 செலுத்தப்பட்டது | |
| 3 / 22 | ரூ.8000 சமரினினுடைய சொந்த மின்சாரத்தை நிறுவனத்தின் காசால் செலுத்தப்பட்டது | |
| 3 / 25 | வினியோக செலவு ரூ.30000 செலுத்தப்பட்டது | |
| 3 / 31 | வங்கிக்கடன் தவணைக் கட்டணமாக ரூ.40000 செலுத்தப்பட்டதுடன் அதன் வட்டி ரூ.2000 | |
| 3 / 31 | ரூ.160000 காரியாளய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. | |

மேலதிக தகவல்கள்

- தளபாடத்தின் பயன்தகு ஆயுள்காலம் 4 வருடமாகும். இழிவுப் பெறுமதி இல்லை.
- 2021.03.31 இருப்பு கிரயம் ரூ.40000
- 2021.03.31 அட்டுறு வினியோக செலவு ரூ.6000

வேண்டப்படுவது,

I. காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு, காசு கொடுப்பனவு நாட்குறிப்பேடு
II. 2021 மார்ச் மாததுக்கான வருமான கூற்று.

BUSINESS & COMMERCE BRANCH

06

# கணக்கீடு

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

### தரம் 12

**தனிவியாபாரம்**

## பகுதி II

**<u>தனி வியாபாரம்</u>**

**வினாக்கள்**

01. ரூபன் வணிகத்தின் 31.03.2021 ல் முடிவடைந்த வருடத்திற்கான பரீட்சை மீதி பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| | ரூபா. '000' | |
| கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | 3500 | 2750 |
| முதலீட்டு வருமானம் | | 300 |
| முதலீடுகள் | 4500 | |
| கொள்வனவு விற்பனை | 11000 | 24000 |
| கொடுத்த,பெற்ற கழிவு | 150 | 300 |
| தரகுகள் | 550 | |
| சம்பளம்(தேறியது) | 2700 | |
| செலுத்திய வாடகை | 350 | |
| செலுத்திய வாடகை | 400 | |
| தொலைபேசிக்கட்டணம் | 550 | |
| வங்கிக்கட்டணம் | 150 | |
| வட்டி | 200 | |
| நிலையான வைப்பு | 6000 | |
| முதலீடுகள் | 4000 | |
| வங்கிக்கடன் | | 8000 |
| மூலதனம் | | 30000 |
| 01.04.2020 ல் இருப்புக்கள் | 550 | |
| நிலம் | 4000 | |
| கட்டடங்கள் | 5000 | |
| விநியோக வாகனங்கள் | 4000 | |
| அலுவலக உபகரணங்கள் | 3000 | |
| இயந்திரங்கள் | 2000 | |
| மின்சாரக்கட்டணம் | 300 | |
| விளம்பரம் | 450 | |
| சுங்க வரி | 100 | |
| பற்று | 50 | |
| அட்டுறு மின்சாரம் 2020.04.01 | | 200 |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 450 |
| அறவிடமுடியாக்கடன் | 150 | |
| பெறுமானத்தேய்வு | | |
| கட்டடங்கள் | | 1000 |
| விநியோக வாகனம் | | 1500 |
| இயந்திரம் | | 500 |
| அலுவலக உபகரணம் | | 500 |
| வங்கி | 16200 | |
| | 69850 | 69850 |

BUSINESS & COMMERCE BRANCH

மேலதிக தகவல்கள்

1. இறுதி இருப்பு ரூ.850 000 மற்றும் அதன் தேறிய நிகர பெறுமதி ரூ.950 000 ஆகும்.
2. நடைமுறையல்லாப்பொறுப்பும் அதன் தேய்மான விகிதமும் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டடக்கிரயத்தில் | 10% |
| அலுவலக உபகரணம் கிரயத்தில் | 10% |
| இயந்திரம் கிரயத்தில் | 10% |
| விநியோக வாகனம் கிரயத்தில் | 10% |

3. ரூ.200 000 அறவிடமுடியாக்கடனாக பதிவளிக்குக. மிகுதி கடன்பட்டோரில் 10% ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்க.
4. EPF மற்றும் ETFக்கு ஊழியர் சம்பளத்தில் பங்களிப்பு செய்ய வேண்டும். ஊழியர் 10%, தொழில் கொள்வோர் 15% பங்களிப்பு செய்ய வேண்டும். ETF க்கு 3%பங்களிப்பு மேற்கொள்ள வேண்டும். ஊழியர் பங்களிப்பு கழித்து தேறிய சம்பளம் பரீட்சை மீதியில் தரப்பட்டுள்ளது.
5. விற்பனை அல்லது திரும்பல் அடிப்படையில் அனுப்பப்பட்ட ரூ.1500 000 இருப்புக்கள் 31.03.2021 வரை விற்பனை செய்யப்படாது காணப்பட்டது. இவை விற்பனை விலையில் 20% இலாபம் சேர்த்து அனுப்பப்பட்டதுடன் இவை கடன் விற்பனையாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:

- 2021.03.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று
- உள்ளவாரான நிதிநிலமைக்கூற்று

BUSINESS & COMMERCE BRANCH

02. சிவா தனிவியாபாரத்தின் 31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான பரீட்சைமீதி பின்வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| கொள்வனவு விற்பனை | 2300 | 7720 |
| மூலதனம் | | 18000 |
| கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் | 250 | 150 |
| கொடுத்த,பெற்ற கழிவு | 30 | 100 |
| நடைமுறையல்லாச் சொத்து (2020.04.01) | 21600 | |
| வாடகை செலுத்தியது | 45 | |
| முதலீடுகள் 5% | 1000 | |
| நிலையான வைப்புக்கள் 12% | 2000 | |
| சம்பளம் (தேறியது) | 1800 | |
| இருப்புக்கள் | 700 | |
| மின்சாரம் | 150 | |
| சுங்கவரி | 50 | |
| விளம்பரம் | 130 | |
| அறவிடமுடியாக்கடன் | 75 | |
| ஐயக்கடன் ஏற்பாடு 2020.04.01 | | 170 |
| வங்கிக்கடன் | | 5000 |
| வங்கிகடன் வட்டி | 50 | |
| செலுத்திய வாடகை | 70 | |
| முதலீட்டு வருமானம் | | 100 |
| வங்கி | 990 | |
| | 31240 | 31240 |

மேலதிக தகவல்கள்

1. 2021.03.31 இல் இறுதி இருப்பின் கிரயம் ரூ.900 000 ஆகவும் அதன் தேறிய நிகரப்பெறுமதி ரூ.720 000 ஆகவும் காணப்பட்டது.
2. ஊழியர் சேமலாபநிதிக்கு (EPF) தொழில்கொள்வோர் 15% உம் ஊழியர் 10% ஆகவும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு (ETF) க்கு தொழில்கொள்வோர் 3% ஆகும். EPF) ஊழியர் பங்களிப்பு சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட பெறுமதி தரப்பட்டுள்ளது.
3. 01.04.2020 இல் நடைமுறையல்லாச் சொத்துக்களின் சுருக்கம் வருமாறு.

| | கிரயம் | திரண்டதேய்வு | கொண்டுசெல்மீதி |
|---|---|---|---|
| நிலம் | 8000 | - | 8000 |
| கட்டடங்கள் | 6000 | 1200 | 4800 |
| இயந்திரம் | 4000 | 800 | 3200 |
| மோட்டார் | 7000 | 1400 | 5600 |
| | | | 21600 |

4. அனைத்து சொத்துக்களும் 01.04.2018 அன்று கொள்வனவு செய்யப்பட்டது.
5. 2021.03.31 இல் அட்டுறு செலவுகள்

மின்சாரம் 100 000



BUSINESS & COMMERCE BRANCH

விளம்பரம் 50 000

6. கடன்பட்டோர் 50% ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ள வேண்டும்

வேண்டப்படுவது.

- 2021.03.31 முடிவடைந்த வருடத்துக்கான வருமானக்கூற்று
- உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று

BUSINESS & COMMERCE BRANCH

**07**

# கணக்கீடு

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்
## தரம் 12
## உற்பத்தி வணிகம்

# பகுதி II

### வினாக்கள்

**<u>07. உற்பத்தி வணிகம்</u>**

உற்பத்தி வியாபாரத்தின் நிதி தகவல்கள் பின்வருமாறு

01. கீழே உள்ள தகவல்கள் ‘‘அசோக் வெதுப்பகம்’’ வியாபாரத்தில் எடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| மூலப்பொருள் இருப்பு | 2020.04.01 ல் | ரூபா.150 000 |
| | 2021.03.31 ல் | ரூபா.180 000 |
| மூலப்பொருள் கொள்வனவு | | ரூபா.800 000 |
| மூலப்பொருள் கொண்டுவரல் கூலி | | ரூபா. 20 000 |
| வெகுமதி கொடுப்பனவு | | ரூபா. 50 000 |
| நேர் கூலி | | ரூபா.200 000 |
| தொழிற்சாலை வாடகை | | ரூபா. 80 000 |
| தொழிற்சாலை மின்சாரம் | | ரூபா. 20 000 |
| சம்பளம் | | ரூபா.120 000 |
| இயந்திர தேய்வு | | ரூபா. 10 000 |
| இயந்திர பராமரிப்பு செலவு | | ரூபா. 25 000 |
| ஆரம்ப குறைவேலை இருப்பு (2020.04.01) | | ரூபா. 30 000 |
| நேரில் மூலப்பொருள் செலவு | | ரூபா. 15 000 |
| மூலப்பொருள் வெளித்திரும்பல் | | ரூபா. 7 000 |
| பொது மேந்தலை செலவு | | ரூபா. 12 000 |

மேலதிக தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. 2021.03.31 ல் குறைவேலை இருப்பு ரூபா.25 000
2. தொழிற்சாலை மின்சாரம் ரூ.5000 செலுத்தப்படாதுள்ளது. (அட்டுறு)
3. சம்பளத்தில் விற்பனையாளர் சம்பளம் ரூ.20 000 உள்ளடங்கப்படுவதோடு, மிகுதி தொழிற்சாலை ஊழியர் சம்பளத்திற்கு உரித்தானது.
4. மூலப்பொருள் இருப்புக்களில் ரூ.7000 அழிவடைந்ததுடன், அது தொடர்பான பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.
5. தொழிற்சாலை வாடகை ரூ.10 000 அடுத்த வருடத்திற்குரியது. (முற்பணம்)

BUSINESS & COMMERCE BRANCH

6. மூலப்பொருள் கொள்வனவு ரூ.15 000 தொடர்பாக நாட்குறிப்புக்களில் எதுவித பதிவுகளும் இடம்பெறவில்லை.
7. இயந்திர பராமரிப்பு செலவு ரூ.3000 இன்னும் கொடுபடாதுள்ளது. (அட்டுறு)
8. வருடத்திற்கான உற்பத்திகளின் எண்ணிக்கை 100 000 அலகுகளாகும்.

வேண்டப்படுவது:

1) 2021.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்திக்கிரயக்கூற்று
2) அலகுக்கான உற்பத்திக்கிரயம்
3) அலகுக்கான கிரயத்தில் 25% இலாபம் சேர்த்து அலகுக்கான விற்பனை விலை தீர்மானிக்கப்படும்.
4) வருடத்திற்கு 80 000 அலகுகள் விற்பனை செய்ய எதிர்பார்த்தால் மீதமுள்ள இருப்புக்களின் கிரயம் யாது? (ஆரம்ப குறைவேலை இருப்புக்கள் இல்லை என கருதுக.)

02. ''சுரஞ்சி யோகட் உற்பத்தி நிறுவனத்தின்'' 2022.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| ஆரம்ப மூலப்பொருள் இருப்பு (2021.03.31) ம் திகதியில் | பால் லீட்டர் 300 அலகுகளுக்கு ரூ.100 வீதம் |
| | ஜெலடீன் ரூ.1000 |
| | பழங்களின் இருப்பு ரூ.3000 |
| முல்பபொருள் கொள்வனவு | பால் லீட்டர் 12000 அலகுகளுக்கு ரூ.130 வீதம் |
| | ஜெலடீன் ரூ.25000 |
| | பழங்கள் மற்றும் வேறு மூலப்பொருள் ரூ.30 000 |

| | |
|---|---|
| நேர் கூலிக்கிரயம் | ரூபா.450 000 |
| நேர் ஏனைய செலவு | ரூபா. 50 000 |
| மேற்பார்வையாளர் சம்பளம் | ரூபா.169 200 |
| தொழிற்சாலை வாடகை | ரூபா.360 000 |
| தொழிற்சாலை மின்சாரம் | ரூபா. 20 000 |
| காவலாளி சம்பளம்(தொழிற்சாலை) | ரூபா. 60 000 |
| நேர் ஏனைய செலவு | ரூபா. 50 000 |
| இயந்திர தேய்வு | ரூபா. 10 000 |
| இயந்திர பராமரிப்புச்செலவு | ரூபா. 30 000 |
| ஏனைய பொதுமேந்தலை செலவு | ரூபா. 25 000 |

1. தொழிற்சாலை மின்சாரம் ரூ.5000 அட்டுறுவாக உள்ளதுடன், தொழிற்சாலை வாடகை ரூ.10000 முற்பணமாக உள்ளது.
2. வருடத்தில் கொள்வனவு செய்த பால் 50 லீட்டர் பயன்படுத்தாதுள்ளது.
3. 2022.03.31 ல் இறுதி மூலப்பொருள் இருப்பு

    பால் லீட்டர் 100

    ஏனைய மூலப்பொருள் ரூ.5000

BUSINESS & COMMERCE BRANCH

4. ஒரு லீட்டர் பாலில் 06 யோகட் உற்பத்தி செய்யப்படும்.
5. 2021.04.01 ல் மூலப்பொருட்களில் 150 யோகட் உற்பத்தி செய்யபடும் அதன் கிரயம் ரூ.4500 ஆகும்.
6. இவ்வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 50 யோகட்கள் அழிவடைந்துள்ளது.

வேண்டப்படுவது:

1) 2022.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்திக்கிரயக்கூற்று
2) யோகட் கோப்பைகளின் அலகு விலை
3) யோகட் 11500 அலகுகள் விற்கப்படுமாயின், அலகொன்றிற்கான விலை ரூ.70 ஆக இருந்தால் இலாபத்தைக் கணிக்க.

BUSINESS & COMMERCE BRANCH

# கணக்கீடு

# 08

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 12

## இலாப நோக்கமற்ற நிறுவனம்

BUSINESS & COMMERCE BRANCH

01. 04.01.2021 அன்று ரூபா.1 500 000 ஐப் பயன்படுத்தி வாசனைத்திரவியங்களை விற்கும் ஒரு வணிகம் ஆரம்பிக்கப்பட்டது. பயிற்சி பெறாத கணக்குதவியாளரால் தயாரிக்கப்பட்ட கணக்கேட்டிலிருந்து பின்வரும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

1. 2022.03.31 அன்று உள்ள சொத்து, பொறுப்பு மீதிகள் பின்வருமாறு.

| | ரூபா. |
|---|---|
| ஆதனம் பொறி உபகரணம்(கிரயம்) | 800 000 |
| 10% வங்கிக்கடன் (31.03.2022) | 500 000 |
| அட்டுறு மின்கட்டணம் | 10 000 |
| இருப்பு | 200 000 |
| வரிக்கட்டணம் | 5 000 |
| கடன்பட்டோர் | 600 000 |
| காசு | 1975 000 |

2. 2021.10.01 ல் ஆதனம் பொறி உபகரணங்களின் வருடாந்த தேய்வு வீதம் 15% ஆகும்.
3. வணிகத்தின் மொத்த விற்பனை ரூபா.2 400 000 மற்றும் கடன்களில் 50% இந்த ஆண்டு செலுத்தப்பட்டது.
4. விற்பனை விலையில் 20% இலாப வைத்து விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டன.
5. வணிகத்தின் காசு விற்பனை ரூபா.400 000 மற்றும் காசு கொள்வனவு ரூபா.200 000 ஆகும். இவ்வருடத்தில் மின்சாரத்திற்காக ரூபா.35 000 செலுத்தப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:

1. 2022.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று
2. 2022.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுகட்டுப்பாட்டுக்கணக்கு
3. 2022.03.31 ல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று.

| |
|---|
| **10** |

# கணக்கீடு

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 12

## பங்குடைமை

### கட்டமைக்கப்பட்ட வினாக்கள்

01) நிசான்,சசி, பங்காளர்களின் உற்பத்தி வியாபார நிறுவனம் ஒன்றின் 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்திற்கான பரீட்சைமீதி பின்வருமாறு.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனக்கணக்கு – நிசான் | | 2000 |
| – சசி | | 800 |
| நடைமுறைக்கணக்கு – நிசான் | | 650 |
| – சசி | 150 | |
| 1.4.2021 இல் – மூலப்பொருள் இருப்பு | 200 | |
| முடிவுப்பொருள் இருப்பு | 150 | |
| குறைவேலை இருப்பு | 120 | |
| மூலப்பொருள் கொள்வனவு | 2500 | |
| உட்சுமைக்கூலி | 75 | |
| நேர்கூலி | 250 | |
| மின்சாரம் | 600 | |
| ஏனைய நிர்வாகச்செலவு | 220 | |
| தொழிற்சாலைக் கட்டக்கிரயம் | 1800 | |
| இயந்திர உபகரணக்கிரயம் | 1500 | |
| விநியோக வான் கிரயம் | 1500 | |
| 1.4.2021 இல் திரண்ட தேய்வு | | |
| தொழிற்சாலை கட்டடம் | | 360 |
| இயந்திர உபகரணம் | | 300 |
| விநியோக வான் | | 200 |
| விற்பனை | | 4300 |
| பற்று – நிசான் | 180 | |
| – சசி | 175 | |
| ஊழியர் சம்பளம் | 350 | |
| சிவா கொண்டு வந்தபணம் | | 1000 |
| வரியும் காப்புறுதியும் | 40 | |
| கடன் – சசி | | 500 |
| காசு | 100 | |
| கடன்பட்டோர் | 500 | |
| கடன்கொடுத்தோர் | | 300 |
| | 10410 | 10410 |

2021.04.01 இல் உற்பத்தி முகாமையாளராக கடமையாற்றிய சிவா புதிய பங்காளராக பங்குடமையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

BUSINESS & COMMERCE BRANCH

பங்குடமை ஒப்பந்தம் பின்வருமாறு:

- நிசான்,சசி,சிவா ஆகியோர்களின் இலாபநட்ட விகிதம் 3:2:1 ஆகும்.
- மூலதனவட்டி வீதம் 10% ஆகும்.
- நிசான்,சசி ஆகியோருக்கு மாதாந்த சம்பளம் ரூபா.40 000 ஆகும். சிவாவுக்கு தொடர்ந்தும் உற்பத்தி முகாமையாளராக மாதாந்தம் ரூபா.50 000 சம்பளம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- சிவா பங்குடமையில் இணைக்கப்பட்ட பின் ரூபா.1 000 000 மூலதனமாக கொண்டுவரப்பட்டதுடன் நிறுவனத்தின் நன்மதிப்பு ரூபா.1 200 000 ஆக மதிப்பிடப்பட்டது.

<u>மேலதிக தகவல்கள்:</u>

1) 31.03.2022 இல் இருப்பு பின்வருமாறு
   மூலப்பொருள் ரூ.100 000
   முடிவுப்பொருள் ரூ.25 000
   குறைவேலை ரூ.79 000

இறுதி முடிவுப்பொருள் இருப்பு அலகுக்கான கிரயம் ரூ.100 ஆகும். அதில் 50 அலகுகள் ரூ.80 படி விற்பனை செய்யலாம் என மதிப்பிடப்பட்டது.

2) பங்காளர்களினால் பொருள் பற்று பின்வருமாறு:
   நிசான் 25 000
   சசி 10 000
   சிவா 15 000
3) வருடத்தில் சிவாக்கு 3 மாத சம்பளம் வழங்கப்பட்டதுடன் அது ஊழியர் சம்பளத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.
4) மின்சாரம் மற்றும் காப்புறுதியில் 60% தொழிற்சாலைக்கும் மிகுதி நிர்வாகத்திற்கும் உரியது.
5) பெறுமானத்தேய்வு நேர்கோட்டு முறையில் பின்வருமாறு
   தொழிற்சாலை கட்டடம் 10%
   இயந்திரம் 20%
   விநியோக வான் 5%
6) பரீட்சைமீதியில் காணப்பட்ட சசிகடன் 1.10.2021 இல் பெறப்பட்டது. வட்டி இன்னும் செலுத்தப்படவில்லை. கடனுக்கான வட்டி 4%

வேண்டப்படுவது:

- 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்குடமையில் உள்ளவாறான வருமானக்கூற்று (பகிர்வு உட்பட)
- 31.03.2022 இல் மூலதனக்கணக்கு, நடைமுறைக்கணக்கு.

BUSINESS & COMMERCE BRANCH

02) ஜனனி,ஆஷா,அஸ்மா ஆகியோரால் நடத்தப்படுகின்ற பங்குடமையின் 31.03.2022 இல் நடைமுறைக்கணக்கு பின்வருமாறு.

| விபரம் | ஜனனி | ஆஷா | அஸ்மா | விபரம் | ஜனனி | ஆஷா | அஸ்மா |
|---|---|---|---|---|---|---|---|
| பற்று | 15 | 05 | 20 | மீதி | 50 | 120 | 70 |
| சம்பளக்கொடுப்பனவு | 80 | 60 | - | முலதன வட்டி | 150 | 100 | 100 |
| வழங்கிய வட்டி | 10 | - | | சம்பளம் | 120 | 120 | - |
| | | | | தரகு | | | 30 |
| | | | | கட்டட வாடகை | - | 60 | - |
| | | | | கடன் வட்டி | 30 | | |
| மீ/கீ/கொ/செ | 695 | 635 | 330 | இலாபப் பகிர்வு | 450 | 300 | 150 |
| | 800 | 700 | 350 | | 800 | 700 | 350 |

2022.03.31 இல் முடிவடைந்த வருடத்தில் இலாபம் கணிப்பிடப்பட்டிருந்தது. தேறிய இலாபம் கணிப்பிடும் போது பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

1. ஜனனி,ஆஷா ஆகியோரின் பொருள்பற்று முறையே ரூ.100 000 மற்றும் ரூ.120 000 கணக்குகளில் பதியப்படவில்லை.
2. இந்நிறுவனம் ஊழிய சேமலாப நிதி ஊழியர் 8%, நிறுவனம் 12% பங்களிப்பு செய்வதுடன் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு 3% வழங்கப்படுவதுடன் தேறிய இலாபம் கணிப்படும்போது ஊழியருக்கு வழங்கப்பட்ட 460 000 பதிவு செய்யப்பட்டது. சம்பளத்தில் ஊழியரின் EPF கழிக்கப்பட்டு செலுத்தப்பட்டது.
3. ரூபா.35 000 பெறுமதியான கொள்வனவு ஒன்று புத்தகங்களில் பதியப்படவில்லை.
4. வரிப்பணம் ரூபா.40 000 ஜனனியினால் செலுத்தப்பட்டது. இது தொடர்பான பதிவு எதுவும் கணக்குகளில் பதியப்படவில்லை.
5. பங்குடமை வியாபாரம் நடத்தி செல்லும் கட்டடம் ஆஷாவுக்கு உரியது எனின் மாதாந்தம் ரூ.10 000 வாடகை செலுத்தப்பட்டதுடன் 2021.10.01 திகதி முதல் ரூ.15 000 படி வாடகையுடன் வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டது. இங்கு ஒரு வருடத்துக்கான வாடகை ஒரே தடவையில் வழங்கப்படுவதுடன் முழுத்தொகையும் வாடகை கணக்குக்கு மாற்றப்பட்டது.

❖ 2022.03.31 ம் திகதி ஆஷா பங்குடமையிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கு வழங்கவேண்டிய முழுத்தொகையும் 10% மாதாந்த வட்டி அடிப்படையில் கடன் கடனுக்கு மாற்ற ஒப்பு கொள்ளப்பட்டது. மேலும் ஆஷா ஓய்வு பெறும் தினத்தில் நிறுவனத்தின் நன்மதிப்பு ரூ.600 000 என மதிப்பிடப்பட்டு மூலதனக்கணக்குடன் சீராக்கங்கள் செய்யவும், தொடர்ச்சியாக ஜனனி, அஸ்மா ஆகியோரால் பங்குடமையை நடாத்திச்செல்வதற்கு ஒப்புகொள்ளப்பட்டது.

முதல் ஒப்பந்தத்திலுள்ள 2:1 என்ற இலாபநட்ட வீதம் மாற்றப்பட்டதை தவிர வேறு எந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

வேண்டப்படுவது:

2022.03.31 முடிவடைந்த வருடத்துக்கான

1. திருத்திய தேறிய இலாபக்கூற்று
2. இலாபநட்ட பகிர்வு கணக்கு
3. மூலதனக்கணக்கு
4. நடைமுறைக்கணக்கு

BUSINESS & COMMERCE BRANCH

03) மிகிர, குமார, ரசிக பங்குடமை வியாபாரத்தின் தகவல்கள் பின்வருமாறு.

- மூலதனவட்டி 5%
- பங்காளர் மாதாந்த சம்பளம் ரூ.5 000

31.12.2020 ம் ஆண்டுக்கான பரீட்சைமீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு (1.1.2020) | 12 000 | |
| கொள்வனவு | 240 000 | |
| வியாபார வருமதி (கடன்பட்டோர்) | 30 000 | |
| பற்று – மிகிரி | 12 000 | |
| குமார | 6 000 | |
| ரசிக | 3 000 | |
| சம்பளம் | 12 000 | |
| விளம்பரம் | 3 000 | |
| மோட்டார் கிரயம் | 100 000 | |
| தளபாடம்கிரயம் | 90 000 | |
| காகிதங்கள் | 2 000 | |
| 10% முதலீடு | 20 000 | |
| காசு | 12 200 | |
| காணி கிரயம் | 300 000 | |
| மூலதனக்கணக்கு மீதி – மிகிரி | | 150 000 |
| குமார | | 120 000 |
| ருசிக | | 100 000 |
| நடைமுறைக்கணக்கு மீதி – ரசிக | 2 000 | |
| மிகிர | | 5 000 |
| குமார | | 3 000 |
| வியாபார சென்மதிகள் | | 15 000 |
| ஐயக்கடன் ஏற்பாடு (1.1.2020) | | 1 200 |
| கடன்மீதி – ரசிக | | 10 000 |
| 1.1.2020ல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | |
| மோட்டார் வாகனம் | | 30 000 |
| தளபாடம் | | 20 000 |
| விற்பனை | | 390 000 |
| | 844 200 | 844 200 |

மேலதிக தகவல்கள்:

1. 31.12.2020 ல் இருப்பு ரூபா. 23 000
2. ரூபா. 12 000 விற்பனையான இருப்பு விற்பனை இன்றேல் திருப்புக என்ற அடிப்படையில் அனுப்பப்பட்டதுடன் இது கடன் விற்பனையாக பதியப்பட்டது. இதில் 50% மிகுதியாக இருப்பதுடன் திருப்பி அனுப்ப வேண்டிய காலம் இன்னும் முடியவில்லை. இந்த இருப்பின் விற்பனை விலையில் கிரயத்தில் 25% இலாபம் இட்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
3. 2020.12.31 ம் திகதி மிகுதியான காகிதாதிகள் இருப்பு ரூ.500.
4. அறவிடமுடியாக்கடன் ரூ.500 எதிர்பார்க்கப்பட்ட ஐயக்கடன் ஏற்பாடு 5% ஆகும்.
5. பங்காளரின் பொருள்பற்று மிகிரி – 5000, குமார – 4000 தொடர்பாக எந்த பதிவுகளும் இல்லை.
6. ரூபா.15 000 பெறுமதியான தளபாடம் 2020.06.30 ம் திகதி ரூபா.10 000 க்கு விற்கப்பட்டதுடன் பெற்ற காசு கணக்கில் வரவு வைத்து, விற்பனைக்கணக்கில் செலவு வைக்கப்பட்டதுடன் வேறு

BUSINESS & COMMERCE BRANCH

எந்த பதிவுகளும் இடம்பெறவில்லை. இந்த தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி 2017.01.01 ஆகும்.

7. அட்டுறு கணக்காய்வு கட்டணம் ரூபா.2 000
8. பெறுமானத்தேய்வு 10% ஆகும்.

வேண்டப்படுவது:

01. 2020.12.31 ம் திகதிக்கான இலாபநட்டக்கணக்கு
02. நடைமுறைக்கணக்கு
03. 2020.12.31 ல் ஐந்தொகை.

04) ஹரி,நிது என்போருக்கிடையில் 3:2 என்ற அடிப்படையில் இலாபப் பகிர்வை மேற்கொண்டு நடத்திச் சென்ற பங்குடமையில் பவன் 2020.04.01 ம் திகதியில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார். இவர்களுடைய புதிய ஒப்பந்தம் வருமாறு.

1. புதிய இலாபநட்ட வீதம் ஹரி,நிது,பவன் இவர்களுக்கிடையே 5:3:2
2. மூலதன மீதிக்கு வட்டி 10%
3. தேறிய இலாபத்துக்கு பவனுக்கு வழங்ப்பட்ட தரகு 10%
4. நிது நிறுவனத்துக்கு வழங்கியிருந்த கட்டடத்துக்கான மாதாந்த வாடகை ரூ.2 000
5. சம்பளம் (மாதாந்த) ஹரி 3000, நிது 5000

2021.03.31 ம் திகதி பரீட்சை மீதி பின்வருமாறு

| | ரூபா 000 | ரூபா 000 |
|---|---|---|
| தளபாட உபகரணம் | 4000 | |
| மோட்டார் வாகனம் | 6000 | |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கம் | | |
| தளபாட உபகரணம் | | 1200 |
| மோட்டார் வாகனம் | | 1800 |
| இருப்பு (2020.04.01) | 800 | |
| கொள்வனவு | 2600 | |
| கொள்வனவு செலவு | 200 | |
| விற்பனை | | 6200 |
| விநியோகச்செலவு | 400 | |
| நிர்வாகச்செலவு | 841 | |
| 12% வங்கிக்கடன் | | 1000 |
| கடன்வட்டி | 100 | |
| வியாபார வருமதி | 400 | |
| வியாபார சென்மதி | | 300 |
| ஐயக்கடன் ஒதுக்கம் | | 20 |
| மூலதன மீதி - ஹரி | | 2000 |
| நிது | | 1800 |
| பவன் | | 800 |
| நடைமுறைக்கணக்கு மீதி - ஹரி | | 200 |
| நிது | | 100 |
| பவன் | | 500 |
| வங்கிமீதி | 759 | |
| அறவிடமுடியாக்கடன் | 20 | |
| கடன்மீதி - நிது | | 200 |
| | 16120 | 16120 |

BUSINESS & COMMERCE BRANCH

மேலதிக தகவல்கள்:

1. இருப்பு 2021.03.31 ரூபா.900 000
2. நடைமுறையல்லாச் சொத்துக்கள் கிரயத்தில் 10% பெறுமானத்தேய்வு இடப்பட வேண்டும்.
3. செலுத்த வேண்டிய மின்சாரம் ரூ.20 000
4. முற்பணமாக செலுத்திய காப்புறுதி ரூ.10 000
5. அறவிடமுடியாக்கடன் ரூ.10 000, ஐயக்கடன் ஏற்பாடு 10%
6. பவன் கொண்டுவந்த மூலதனகாசு சரியான முறையில் பதிவுசெய்யப்பட்டது.
7. பவன் சேரும் போது நிறுவனத்தின் நன்மதிப்பு ரூ.1 000 000 என மதிப்பிடப்பட்டு மூலதன கணக்கின் ஊடாக சீராக்கம் செய்யப்பட வேண்டும்.
8. பங்காளரின் காசுப்பற்று ஹரி - ரூ.50 000, நிது - ரூ.40 000, பவன் - ரூ.30 000
9. பவனின் கடன் தொகையானது அவர் பங்குடமையில் இணைந்த திகதி அன்றே மூலதனக் கணக்குகளில் மாற்றப்படவேண்டும்.

வேண்டப்படுவது:

1. 2021.03.31 திகதிக்கான இலாபநட்டக்கணக்கு
2. நடைமுறைக்கணக்கு, மூலதனக்கணக்கு
3. 2020.12.31 ல் நிதிநிலமைக்கூற்று

05) ரங்கா,ஜீவா மற்றும் சுஜீவ 5:3:2 என்ற அடிப்படையில் இலாபப் பகிர்வை மேற்கொண்டு நடத்திச் சென்ற பங்குடமையில் ரங்கா என்பவர் 2020.12.31 ம் திகதி ஓய்வுபெற உள்ளார். இவர்களுக்கிடையிலான ஒப்பந்தம் வருமாறு.

- ரங்காவிற்கு மாதாந்த சம்பளம் ரூ.1 000 ஆகும்.
- தேறிய இலாபத்துக்கு சுஜீவவுக்கு வழங்ப்பட்ட தரகு 10%

2020.12.31 இல் காணப்பட்ட பரீட்சைமீதி பின்வருமாறு.

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | 180 000 | |
| அலுவலக உபகரணம் | 195 000 | |
| தளபாடம் | 82 000 | |
| இருப்பு 2020.01.01 ம் திகதிக்குரியது | 19 700 | |
| கொள்வனவு | 134 400 | |
| விற்பனை | | 448 000 |
| உட்சுமைக்கூலி | 6 900 | |
| வியாபார வருமதி | 43 500 | |
| வியாபார சென்மதி | | 28 750 |
| மின்சாரம் | 8 700 | |
| வாடகை | 14 000 | |
| சம்பளம் | 36 900 | |
| காகிதாதிகள் | 11 300 | |
| அறவிடமுடியாக்கடன் | 2 000 | |
| கொடுத்த கழிவு | 3 600 | |
| பெற்ற கழிவு | | 4 900 |
| விளம்பரம் | 9 250 | |
| வங்கி மீதி | 38 650 | |
| காசு மீதி | 25 700 | |
| பற்று | 21 000 | |
| மூலதனக்கணக்கு | | |
| ரங்கா | | 100 000 |
| ஜீவா | | 80 000 |

BUSINESS & COMMERCE BRANCH

| | | |
|---|---|---|
| சுஜீவ | | 60 000 |
| நடைமுறைக்கணக்கு | | |
| ரங்கா | | 18 800 |
| ஜீவா | | 9 000 |
| சுஜீவ | | 8 050 |
| 2020.01.01 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | |
| மோட்டார் வாகனம் | | 36 000 |
| அலுவலக உபகரணம் | | 19 000 |
| தளபாடம் | | 12 300 |
| 2020.01.01 இல் (மதிப்புக்ககுறைப்பிற்கான ஏற்பாடு) | | 1 500 |
| வட்டி வருமானம் | | 6 300 |
| | 832 600 | 832 600 |

மேலதிக தகவல்கள்:

1. ரங்கா ஓய்வுபெறும் போது
2. இறுதி இருப்பு 2020.12.31 இல் ரூபா.20 000
3. பங்காளர்களின் பற்று

| | ரங்கா | ஜீவா | சுஜீவ |
|---|---|---|---|
| காசு | 8 000 | 7 000 | 6 000 |
| பொருள் | 10 000 | 8 000 | 6 000 |

பொருள் பற்று கணக்குகளில் பதிவழிக்கப்படவில்லை

4. அறவிடமுடியாக்கடன் ரூபா.2 500 கழிக்கப்பட்டதுடன், மிகுதி கடன் கடன்பட்டோரில் ரூ.2500 ஐயக்கடனாக ஏற்பாடு செய்ய வேண்டும்.
5. நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு கிரயத்தில் 10% தேய்வு இடப்படுகிறது.
6. அட்டுறு மின்சாரம் ரூ.2 800, மாதாந்த கட்டட வாடகை ரூ.1 000 ஆகும்.
7. விலகலின் போது நிறுவனத்தின் நன்மதிப்பு ரூ.40 000 ஆக இருந்ததுடன், அது பங்காளர் மூலதனக்கணக்கில் சீராக்கம் செய்யப்பட வேண்டும்.

வேண்டப்படுவது:

1. 2020.12.31 திகதிக்கான இலாபநட்டக்கணக்கு
2. நடைமுறைக்கணக்கு, மூலதனக்கணக்கு
3. 2020.12.31 ல் நிதிநிலமைக்கூற்று

06) அசோக் மற்றும் நிமல் 3:2 எனும் இலாப நட்ட அடிப்படையில் பங்குடமை வணிகமொன்றை நடாத்திச் சென்றனர். 2017.04.01 திகதியில் விமல் என்பவர் புதிய பங்காளராக சேர்த்துக்கொள்ளப்பட்டார். 2017.04.01 ம் திகதியில் நிதிநிலமைக்கூற்று தகவல்கள் பின்வருமாறு.

| | ரூபா000 | ரூபா000 |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | |
| உபகரணம் | 6000 | |
| பெறுமானத்தேய்வு | (600) | 5400 |
| நடைமுறைக்கணக்கு | | |
| இருப்பு | 400 | |
| கடன்பட்டொர் | 1200 | |
| காசு | 600 | 2200 |
| மொத்த சொத்துக்கள் | | **7600** |
| உரிமையாண்மையும் பொறுப்பும் | | |
| மூலதனக்கணக்கு | | |

BUSINESS & COMMERCE BRANCH

| | | |
|---|---|---|
| அசோக் | 3000 | |
| நிமல் | 2000 | 5000 |
| நடைமுறைக்கணக்கு | | |
| அசோக் | 120 | |
| நிமல் | 80 | 200 |
| நடைமுறை அல்லாப்பொறுப்பு | | |
| அசோக் கடன் | | 1000 |
| நடைமுறைப்பொறுப்பு | | |
| கடன்கொடுத்தோர் | 1050 | |
| அட்டுறு கூலி | 300 | |
| அட்டுறு வட்டி | 50 | 1400 |
| மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்பு | | **7600** |

மேலதிக தகவல்கள்:

1. விமல் ரூ.1 000 000 மூலதனமாக கொண்டுவரப்பட்டது.
2. விமல் பங்குடமையில் சேர்ந்த போது இவர்களுடைய புதிய ஒப்பந்தம் பின்வருமாறு.
   - அனைத்து பங்காளர்களுக்கு ரூ.5 000 மாதாந்த சம்பளமாக வழங்கப்படும்.
   - புதிய இலாப நட்ட விகிதம் அசோக், நிமல் மற்றும் விமல் ஆகியோருக்கிடையே 2:2:1 என்ற விகிதத்தில் பகிரப்படும்.
   - பங்காளர்களினால் கொண்டு வரப்பட்ட கடன்களுக்கு 10% வட்டி வழங்கப்படும்.
3. நன்மதிப்பு ரூ.600 000 மூலதனக்கணக்கில் சீராக்கம் செய்ய வேண்டும்.
4. கீழே உள்ள கொடுக்கல் வாங்கல் 2018.03.31 முடிவடைந்த வருடத்திற்கானது.

| | ரூபா. 000 |
|---|---|
| காசு விற்பனை | 3000 |
| கடன் விற்பனை | 4000 |
| கடன் கொள்வனவு | 2500 |
| கடன்கொடுத்தோருக்கு செலுத்திய பணம் | 2200 |
| உபகரணக்கொள்வனவு | 800 |
| கொடுத்த வாடகை | 700 |
| கொடுத்த வட்டி – அசோக் | 120 |
| நிர்வாகச்செலவு | 1300 |
| காசுப்பற்று – அசோக் | 80 |
| நிமல் | 60 |
| சம்பளம் - அசோக் | 50 |
| நிமல் | 50 |
| விமல் | 50 |
| உபகரணப்பெறுமானத்தேய்வு | 620 |

5. இறுதிஇருப்பு 2018.03.31 திகதியில் ரூ.500 000, 2018.03.31 ல் கடன்கொடுத்தோர் ரூ.600 000, அட்டுறு வாடகை 2018.03.31 ரூ.200 000.

வேண்டிப்படுவது:

1. 2020.12.31 திகதிக்கான இலாபநட்டக்கணக்கு
2. நடைமுறைக்கணக்கு, மூலதனக்கணக்கு
3. 2020.12.31 ல் நிதிநிலமைக்கூற்று

BUSINESS & COMMERCE BRANCH

# கணக்கீடு

**14,15**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்
## தரம் 13

முகாமைக் கணக்கீட்டின் அடிப்படை எண்ணக்கருக்களை மதிப்பீட்டிற்குட்படுத்துவார். – கிரய நடத்தையினைப் பகுப்பாய்வு செய்வார்.

BUSINESS & COMMERCE BRANCH

01. பாடசாலை புத்தகப் பை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று S மற்றும் T ஏன்ற 2 உற்பத்தித்துறையையும் ஒரு சேவைத்துறையையும் கொண்டுள்ளது.

துறைகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| விபரம் | S | T | சேவை |
|---|---|---|---|
| இயந்திரக்கிரயம் | 50 000 | 70 000 | 20 000 |
| நேரில் ஊழியர் சம்பளம் | 35 000 | 40 000 | 15 000 |
| தளப்பரப்பு (சதுர மீட்டர்) | 12 000 | 9 000 | 6 000 |
| ஊழிய மணித்தியாலம் | 2 000 | 3 000 | |
| இயந்திர மணித்தியாலம் | 3 000 | 1 000 | |
| ஊழியர் எண்ணிக்கை | 50 | 30 | 10 |
| கிலோ வாட் | 3 000 | 3 000 | 2 000 |
| | | | |

எதிர்வரும் வருடத்திற்காக மதிப்பிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| கட்டிட வாடகை | - தொழிற்சாலை | 90 000 |
| | - நிர்வாக கட்டிடம் | 30 000 |
| இயந்திரத்தேய்வு | - | 70 000 |
| மின்சாரக்செலவு | - தொழிற்சாலை | 80 000 |
| | - நிர்வாக கட்டிடம் | 20 000 |
| அலுவலக உபகரணத்தேய்வு | | 18 000 |
| இயந்திர காப்புறுதி | | 28 000 |
| ஊழியர் காப்புறுதி | | 27 000 |
| கணக்காளர் சம்பளம் | | 15 000 |

- சேவைத்துறையில் செலவுகள் உற்பத்தித்துறைகளுக்கு இடையில் சமமாக மறுபகிர்வு செய்யப்படுகின்றன.
- உற்பத்தி தொழிலாளரால் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பைக்களுக்கும் ரூ.250 படி 2021.03.31ம் திகதி முடிவடையும் வருடத்திற்கு ஊழியர் சம்பளமாக ரூ.150 000 செலுத்தப்பட்டுள்ளது.
- ஒரு பையை உற்பத்தி செய்ய ஒரு அலகு மூலப்பொருள் தேவைப்படுகிறது மற்றும் மூலப்பொருட்களின் கொள்வனவு ரூ.580 000 ஆகும். மூலப்பொருட்களின் இறுதிஇருப்பு ரூ.40 000 ஆகும்.
- S உற்பத்தி துறையின் மேந்தலை இயந்திர மணித்தியாலத்தின் அடிப்படையிலும், T உற்பத்தி துறையின் மேந்தலை ஊழியர் மணித்தியாலத்தின் அடிப்படையிலும் உறிஞ்சப்படுகிறது.

- பைகளின் விற்பனை விலையில் 20% இலாபம் சேர்க்கப்படும்.

வேண்டப்படுவது:

1. மேந்தலை பகிர்வுக்கூற்று (சேவைத்துறையின் மறுபகிர்வு உட்பட)
2. S மற்றும்T பொதுவான செலவு உறிஞ்சல் விகிதம்
3. ஒரு பைக்கான உற்பத்திச்செலவு
4. ஒரு பைக்கான விற்பனை விலை

02. **சுவிமல்** வணிகம் விளையாட்டு பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு வணிகமாகும். இவ் வணிகத்தினால் விளையாட்டு கார்கள் மற்றும் பேரூந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த உற்பத்தி நிறுவனத்தில் ''ஒன்றினைத்தல் மற்றும் முடிவுறுத்தல்'' என்ற இரண்டு உற்பத்தித் துறைகளும் ''களஞ்சியம்'' சேவைத்துறை ஆகியவையும் காணப்படுகின்றது. இந்த அனைத்துத் துறைகளும் ஒரே கட்டிடத்தில் நடாத்தப்படவதுடன் நிர்வாகத்துறையும் அதே கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

மதிப்பிடப்பட்ட உற்பத்தி மேந்தலை செலவுகள் கீழே தரப்பட்டுள்ளது.

| பொருள் | மொத்த செலவு | ஒன்றினைத்தல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் |
|---|---|---|---|---|
| நேரில் மூலப்பொருள் கிரயம் | 400 000 | 200 000 | 200 000 | - |
| நேரில் கூலி | 1 200 000 | 600 000 | 400 000 | 200 000 |
| மின்சாரம் | 320 000 | ? | ? | ? |
| வாடகை | 600 000 | | | |
| இயந்திர பராமரிப்பு செலவு | 120 000 | | | |
| பாதுகாப்புச்செலவு | 180 000 | | | |
| களஞ்சிய நிர்வாகச் செலவு | 40 000 | - | - | 40 000 |

மேலதிக தகவல்கள்:

1.

| விபரம் | ஒன்றினைத்தல் | முடிவுறுத்தல் | களஞ்சியம் | நிர்வாகம் |
|---|---|---|---|---|
| தளப்பரப்பு | 40000 | 30000 | 20000 | 10000 |
| கிலோவாட் | 7000 | 3000 | 2000 | 1000 |
| பாதுகாப்பு ஊழியர் எண்ணிக்கை | 5 | 3 | 2 | 2 |
| இயந்திரச் செலவு | 2000000 | 1800000 | - | - |
| நேர் ஊழியமணித்தியாலம் | 20000 | 40000 | | |

2. ரூ.80 000 பெறுமதியான மின்கட்டணம் கணக்கேடுகளில் பதிவுசெய்யப்படவில்லை. மின்கட்டணங்களுள் நிர்வாக அலுவலக மின்கட்டணம் ரூ 40000 உள்ளடங்கியுள்ளது.

BUSINESS & COMMERCE BRANCH

3. வாடகை வெலவினுள் எதிர்வரும் ஆண்டுக்கான வாடகை செலவு ரூ.20 000 உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. இயந்திரத்திற்கான தேய்வு கிரயத்தில் 10% ஆகும்.
5. களஞ்சிய செலவுகளை உற்பத்தித்துறைக்கிடையே 3:2 விகிதத்தில் மீள்பகிர்வு செய்யப்பட வேண்டும்.
6. முடிவுறுத்தல், ஒன்றினைத்தல் துறைகளின் மேந்தலைக்கிரயங்கள் நேர் ஊழிய மணித்தியாலத்தின் அடிப்படையில் உற்ஞ்சப்படுகிறது.

7. கீழுள்ள தகவல்கள் விளையாட்டு கார் மற்றும் பேரூந்து உற்பத்தியுடன் தொடர்புடையது.

| | கார் | பேரூந்து |
|---|---|---|
| நேர் ஊழியமணிநேர – முடிவுறுத்தல் | 4 | 3 |
| - ஒன்றினைத்தல் | 5 | 4 |
| நேர்மூலப்பொருள் கிரயம் | 150 | 180 |
| நேர் ஊழியக்கிரயம் | 100 ஒரு மணிக்கு | 150 ஒரு மணிக்கு |
| நேர் ஏனைய செலவு | 50 | 60 |

வேண்டப்படுவது:
1. உற்பத்தி மேந்தலைப் பகிர்வுக்கூற்று
2. மேந்தலை உறிஞ்சல் விகிதம்
3. விளையாட்டு கார் மற்றும் பேரூந்துக்கான மொத்த உற்பத்தி செலவு
4. விளையாட்டு காருக்கு விற்பனை விலையில் 20% இலாபம் வைத்து விற்பனை விலை தீர்மானிப்படுமாயின் விளையாட்டு காரின் விற்பனை விலை யாது?
5. விளையாட்டு பேருந்துக்கு விற்பனை விலையில் 20% இலாபம் வைத்து விற்பனை விலை தீர்மானிப்படுமாயின் விளையாட்டு பேரூந்தின் விற்பனை விலை யாது?

03. மின்உபகரணம் உற்பத்தி செய்யும் கம்பனியில் உற்பத்தித்துறை 02ம் மற்றும் சேவைத்துறையையும் கொண்டு நடாத்தப்படுகின்றது. 2022 ஜனவரி மாதத்திற்கான அத்துறைகளின் மொத்த செலவுகள் மற்றும் பிற தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

1.

| விபரம் | உற்பத்தித்துறை | | சேவைத் துறை |
|---|---|---|---|
| | **01** | **02** | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 10 | 8 | 2 |
| இயந்திரத்தின் பெறுமதி(ரூ) | 1400 000 | 800 000 | - |
| இயந்திர செயற்பாட்டு மணித்தியாலம் | 2000 | 1500 | - |
| தளப்பரப்பு | 1000 | 800 | 200 |

2. மதிப்பிடப்பட்ட மேந்தலை செலவுகள் பின்வருமாறு

| | |
|---|---|
| வாடகை | 4000 |
| நேரில் சம்பளம் | 30000 |
| இயந்திரக்காப்புறுதி | 220000 |
| எரிபொருள் மற்றும் சக்தி | 75000 |
| ஊழியர் நலன்புரிச்செலவு | 40000 |

சேவைத்துறையிலுள்ள மேந்தலைகள் உற்பத்திதுறைகளுக்கிடையே சமமான முறையில் மீள்பகிர்வு செய்யப்படும், பொது மேந்தலை கிரயங்கள் இயந்திர செயற்பாட்டு மணத்தியாலத்தின் அடிப்படையில் உறிஞ்சப்படும்.
வேண்டப்படுவது:

BUSINESS & COMMERCE BRANCH

1. மேந்தலை பகிர்வுக்கூற்று (சேவைத்துறைக்கான மீள்பகிர்வு உட்பட)

2. மின்உபகரணங்களின் உற்பத்தி தொடர்பாக உற்பத்தித்துறை 01ற்கு 3 மணித்தியாலம் மற்றும் உற்பத்தித்துறை 02ற்கு 5 மணித்தியாலம் எடுத்துக்கொண்டால் ஒரு மின்உபகரணத்தை உற்பத்தி செய்ய ஏற்படும் மொத்த மேந்தலை செலவு யாது?

3. ஒரு மின்உபகரணத்திற்கான முதன்மைச்செலவு ரூ.8500 எனின் மொத்த செலவு யாது?

4. கிரயத்தில் 20% இலாபம் வைத்து விற்பனை செய்ய எண்ணினால் மின் உபகரணத்திற்கான விற்பனை விலை யாது?

04. புத்தகங்களை அச்சிடும் நிறுவனத்தின் உற்பத்தி பிரிவு தொழிற்சாலையும் அதற்காக சேவை வழங்கும் களஞ்சியத்தையும் கொண்டுள்ளது.

2021 மாதத்திற்கான குறிப்பிடப்பட்ட புத்தகம் தொடர்பான பாதிடப்பட்ட தகவல் பின்வருமாறு.

1.

| | தொழிற்சாலை (ரூ) | களஞ்சியம் (ரூ) | மொத்தம் (ரூ) |
|---|---|---|---|
| மின்சாரம் செலவு | 90 000 | 10 000 | 100 000 |
| நேரில் செலவு | ? | ? | 140 000 |
| கட்டிட வாடகை | 150 000 | 30 000 | 180 000 |
| ஊழியர் காப்புறுதி | 60 000 | 10 000 | 70 000 |
| இயந்திர தேய்வு | 45 000 | - | 45 000 |
| இயந்திர காப்புறுதி | 60 000 | - | 60 000 |
| பாதுகாப்பு ஊழியர் சம்பளம் | ? | ? | 50 000 |

2. பிற தகவல்கள்

| | அச்சிடல் | புத்தகம்கட்டல் | களஞ்சியம் |
|---|---|---|---|
| ஊழியர்களின் எண்ணிக்கை | 20 | 10 | 5 |
| பாதுகாப்பு ஊழியர்கள் எண்ணிக்கை | 2 | 2 | 6 |
| தளப்பரப்பு (சதுரமீற்றர்) | 10 000 | 5 000 | 3 000 |
| இயந்திர – கிரயம் | 20 000 | 10 000 | - |
| இயந்திர வேலை மணித்தியாலம் | 4 000 | 500 | - |
| நேர் ஊழிய வேலை மணித்தியாலம் | 1 000 | 5 000 | - |
| மாதத்திற்கான கிலோ வாட் | 2 000 | 1 000 | - |
| களஞ்சிய பிரிவின் சேவை வழங்குதல் | 60% | 40% | - |

3. அச்சிடும் துறை மேந்தலைகள் இயந்திர வேலை மணித்தியாலத்திலும் புத்தகம் கட்டும் துறை நேர்ஊழிய வேலை மணித்தியாலத்திலும் மேந்தலை உறிஞ்சப்படும்.
4. அச்சிடப்பட்ட புத்தகத்திற்கு
    - நேர் பொருள்கிரயம் ரூ. 210 உம் நேர்கூலி கிரயம் ரூ. 140 உம் ஆகும்.
    - அச்சிடும் பகுதியில் 2 இயந்திர மணித்தியாலமும் புத்தகம் கட்டும் பகுதியில் 2 ஊழிய மணித்தியாலம் ஒரு புத்தகத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும்
    - ஒரு புத்தகத்தின் விற்பனை விலையில் 30% இலாபம் சேர்த்து விற்பனை செய்யப்படும்.

BUSINESS & COMMERCE BRANCH

வேண்டப்படுவது:

பெப்ரவரி மாதத்திற்கான,
அ. மேந்தலைப்பகுப்பாய்வு கூற்று
ஆ. மேந்தலை உள்ளடக்கம்
இ. ஒரு புத்தகத்துக்கான உற்பத்திக்கிரயம்
ஈ. ஒரு புத்தகத்தின் விற்பனை விலை

05. உற்பத்தி வணிகம் தொடர்பான பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்படுகின்றது.

2022 மார்ச் மாதத்திற்கான சம்பளம் தொடர்பான தரவுகள் வருமாறு.

- ஊழியர்களின் எண்ணிக்கை 5
- அடிப்படை சம்பளம் மணி ரூ 400
- மேலதிக நேர சம்பளம் மணி ரூ 650
- ஊழிய வேலை மணித்தியாலம் ஒரு நாளைக்கு 6 மணித்தியாலம் மாதமொன்றிற்கு 20 நாட்கள்.
- ஊழியர்களின் வருகை கொடுப்பனவு மற்றும் ஏனைய விபரங்கள் வருமாறு.

| ஊழியர் பெயர் | வேலை செய்த மணித்தியாலம் | வருகை கொடுப்பளவு | கழிப்பனவுகள் | |
|---|---|---|---|---|
| | | | ஊழியர் முற்பணம் | கடன் தவணை பணம் |
| புவி | 128 | 2500 | 10 000 | - |
| தரணி | 120 | 2000 | - | 12 000 |
| சசி | 130 | 2500 | 10 000 | - |
| நயோமி | 120 | 2000 | - | 12 000 |
| ரவிந்து | 114 | - | 10 000 | - |
| | | | | |

- அனைத்து ஊழியர்களும் நலன்புரிசங்க பங்களிப்பாக ரூ 200 செலுத்த வேண்டும்.
- புவி விரேஷட ஊழியர் என்ற முறையில் அவர் மாலை வேலையில் மேற்பார்வை பணியில் ஈடுபடுவதன் காரணமாக அவருக்கு ரூ 5000 மேலதிகமாக வழங்கப்பட வேண்டும்.
- ஊழியர் சேமலாப நிதி , ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்பகள் வருமாறு.
    - ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு தொழில்தருநர் 15%
    - ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு ஊழியர் 10%
    - ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்பு 3%

வேண்டப்படுவது.

1. மார்ச் மாதத்திற்கான சம்பளப்ப பட்டியல்
2. மார்ச் மாதத்திற்கான
    I. சம்பள கட்டுப்பாட்டுக் கணக்கு
    II. ஊழியர் சேமலாப நிதி சென்மதி கணக்கு
    III. ஊழியர் சேமலாப நிதி செலவு கணக்கு

BUSINESS & COMMERCE BRANCH

06. ஜனவரி மாத அஞ்சான் கம்பனியின் ஊழியர் தொடர்பான தகவல் ஆகும்.

- மாதத்தில் செய்யவேண்டிய அடிப்படை நேரம் 160 ஆகும்.
- ஒரு மணிநேர அடிப்படை கூலி ரூ.1200 ஆகும்.
- மேலதிக நேரம் அடிப்படை சம்பளத்தில் 150%
- ஆடிப்படை சம்பளத்தில் ஊழியர் 10% நிறுவனம் 15% ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு செய்ய வேண்டும். ஊழியர் நம்பிக்கை நிதிக்கு 3% பங்களிப்பு செய்ய வேண்டும்.
- ஊழியர் நலன்புரி சங்கத்திற்கு ஒரு ஊழியரிடமிருந்து ரூ.500 வசூலிக்கப்படும்.
- 2022 ஜனவரி மாதத்திற்கான வேலை நேரம் கீழே உள்ளது.

| ஊழியர் | வேலை செய்த மணித்தியாலம் |
|---|---|
| சக்தி | 160 |
| நிஷா | 165 |
| உஷா | 165 |
| அஷ்லி | 155 |
| தனு | 150 |

<u>வேண்டப்படுவது,</u>

1. ஜனவரி 2022 க்கான சம்பளப்பட்டியல்.
2. நிறுவனத்தின் சம்பளக்கூலி கட்டுப்பாட்டுக் கணக்கு
3. சம்பளம் கூலி தொடர்பான மொத்த செலவு யாது

07. அமாயா நிறுவனத்தின் 2022 மார்ச் மாதத்தின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

- ஊழியர்களின் அடிப்படை சம்பளம்
  முகாமையாளர் ரூ.86 000
  விற்பனை உதவியாளர் ரூ.44 000
  களஞ்சிய முகதமையாளர் ரூ.57 000
- 2022 மார்ச் மேலதிக நேர கொடுப்பனவு
  முகாமையாளர் ரூ. 7 000
  விற்பனை உதவியாளர் ரூ.10 000
  களஞ்சிய முகாமையாளர் ரூ. 5 000
- அனைத்து ஊழியர்களின் மொத்த சம்பளத்தில் 2% ஊழியர் நலன்புரி செலவுக்காக கழிக்கப்படும்.
- மொத்த சம்பளத்தில் EPF பங்களிப்பு ஊழியர் 8% உம் கம்பனி 12% பங்களிப்பு செய்ய வேண்டும்.
- மொத்த சம்பளத்தில் ETF க்கு 3% பங்களிப்பு கணிக்கப்பட வேண்டும்.
- விற்பனை உதவியின் கடன் தவணைப்பணமாக 10 000 கழிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு மாதமும் EPF மற்றும் ETF நிதிகள் வரும் மாதத்தின் இரண்டாவது வாரத்தில் அனுப்பப்படும்.
  செலுத்த வேண்டிய EPF ரூ.42 000 (2022.02.28)
  செலுத்த வேண்டிய ETF ரூ. 6 300 (2022.02.28)

BUSINESS & COMMERCE BRANCH

வேண்டப்படுவது,

1. பின்வரும் மாதிரியை பயன்படுத்தி 2022 மார்ச் மாத சம்களப்பட்டியலை தயாரிக்குக.

| ஊழியர் பெயர் | அடிப்படை சம்பளம் | மேலதிக கொடுப்பனவு | மொத்த சம்பளம் | கழிப்பனவு | | | மொத்த கழிப்பனவு | தேறிய சம்பளம் | நிறுவனம் பங்களிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | EPF | கடன் | நலன்புரி செலவு | | | EPF | ETF |
| | | | | | | | | | | |

2. தொடர்புடைய கணக்குகள்
3. 31.03.2022 முடிவடைந்த மாத்திற்கான ஊழியர் தொடர்பான மொத்த செலவுகள் (ஒவ்வொரு உருப்படியையும் தனித்தனியாக குறிப்பிடவும்)

08. சிவாஜி கம்பனி மூலம் விற்கப்படும் ஒரு வகை முகமூடியைப் பள்ளி 2022 மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

| திகதி | விபரம் | அளவு | அலகு விலை |
|---|---|---|---|
| 2022.01.01 | ஆரம்ப இருப்பு | 2000 | 50 |
| 2022.01.03 | கொள்வனவு | 3000 | 60 |
| 2022.01.08 | விற்பனை | 2500 | ? |
| 2022.01.15 | விற்பனை | 1500 | ? |
| 2022.01.18 | கொள்வனவு | 3000 | 65 |
| 2022.01.25 | விற்பனை | 3000 | ? |
| 2022.01.31 | கொள்வனவு | 3000 | 70 |

வேண்டப்படுவது,

1. நிறையளிக்கப்பட்ட சராசரி விலையிடலில் 31.01.2022 இல் இருப்புக்களின் பெறுமதி யாது?
2. நிறையளிக்கப்பட்ட சராசரி விலையிடல் முறையில் விற்பனை கிரயம் யாது?

(அ) இந்நிறுவனத்தின் இருப்பு தொடர்பான தகவலில் பின்வருமாறு

| | நுகர்வு (மாதம்) | பாவனைக்காலம் (மாதம்) |
|---|---|---|
| ஆகக்கூடிய | 3500 | 4 |
| ஆகக்குறைந்த | 2000 | 2 |

வேண்டப்படுவது,

1. மறுகட்டளை தொகை யாது?
2. மறுகட்டளை மட்டம் யாது?
3. ஆகக்கூடிய மட்டம் யாது?

BUSINESS & COMMERCE BRANCH

09. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் அனிருத் பொதுக்கம்பனியுடன் தொடர்புடையது 2022 ஜூன் மாதம் தொடர்பான களஞ்சியப்பேரேடு கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | மூலப்பொருள் கொள்வனவு | மூலப்பொருள் விற்பனை | ஆரம்ப இருப்பு |
|---|---|---|---|
| 01.06 | | | 2000kg அலகுக்கு ரூ.800 |
| 03.06 | 5000 kg அலகுக்கு ரூ.900 | - | ? |
| 12.06 | 3000 kg அலகுக்கு 1200 | - | ? |
| 16.06 | - | 6 000 kg | ? |
| 20.06 | 2000 kg அலகுக்கு ரூ.1400 | - | ? |
| 25.06 | | 5 500 kg | ? |

மாதாந்த ஆகக்கூடிய பாவனை 4500 kg மற்றும் ஆகக்குறைந்த பாவனை 2500 kg ஆகும். அதிகபட்ச காத்திருப்பு காலம் 4 மாதங்கள் மற்றும் குறைந்தபட்ச காத்திருப்பு காலம் 2 மாதங்கள். ஆண்டு தேவை 12000 மற்றும் வைத்திருக்கும் நேரம் ஒரு அலகுக்கு ரூ.4 மற்றும் மொத்த கட்டளைக்கிரயம் ரூ.600 ஆகும்.

1. மறுகட்டளை மட்டம்
2. ஆகக்குறைந்த இருப்பு மட்டம்
3. பொருளாதார கட்டளை கணியம்
4. நிறையளிக்கப்பட்ட சராசரி கிரய முறை (WAC) பயன்படுத்தினால், வணிகத்தினால் மொத்த இருப்பு பெறுமதியை கணிப்பிடுக.
5. முதல் உள் முதல் வெளி முறையின் படி இருப்புப்பெறுமதியை கணிப்பிடுக.

10. மூலப்பொருள் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | விபரம் | விலை | கொள்விலை | அலகுக்கானபெறுமதி |
|---|---|---|---|---|
| 2022.04.01 | இருப்பு | | 20 | 1000 |
| 2022.04.03 | கொள்வனவு | | 22 | 500 |
| 2022.04.05 | கொள்வனவு | | 23 | 400 |
| 2022.04.08 | விற்பனை | 25 | | 800 |
| 2022.04.12 | கொள்வனவு | | 24 | 700 |
| 2022.04.20 | விற்பனை | 27 | | 1000 |
| 2022.04.26 | கொள்வனவு | | 25 | 500 |
| 2022.04.30 | விற்பனை | 28 | | 300 |

வேண்டப்படுவது, முதல் உள் முதல் வெளி முறையின் படி

1. இறுதி இருப்புக்கிரயம்
2. விற்பனைக்கிரயம்
3. மொத்த இலாபம்

11. பாடசாலையில் வணிக சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மாநாடு தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

ரூபா.

BUSINESS & COMMERCE BRANCH

| | |
|---|---|
| தொழிற்சாலை வாடகை (ஒரு நாளைக்கு) | 50 000 |
| போதகர் கட்டணம் (ஒரு நாளைக்கு) | 20 000 |
| சுகாதார ஆலோசனை விளம்பரங்களை அச்சிடல் கிரயம் | 4 000 |
| செலவுகள் - சாமியார்களுக்கு (3 நாட்களுக்கு) | 6 000 |
| - மாணவர்களுக்கு (ஒரு பெண் மாணவி) | 100 |
| வாய்முகமூடி (ஒரு மாணவருக்கு) | 30 |
| தண்ணீர் பாட்டில்கள் (ஒரு மாணவருக்கு) | 20 |
| கல்விக்கட்டணம் (ஒரு மாணவருக்கு) | 50 |

- ஒரு நாள் பாடம் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அனைத்து மாணவர்களுக்கு மூன்று பாடங்களிலும் கலந்து கொள்வது கட்டாயமாகும்.
- கை கழுவுதல் மற்றும் கிருமிநாசினி திரவத்திற்காக பாடசாலை வணிகர் சங்கத்தால் ரூ. 10000 செலவு தாங்கியுள்ளது.
- பங்கேற்கும் மாணவருக்கு (3 நாட்களுக்கு) கட்டணம் ரூ.500

வேண்டப்படுவது,

1. மாநாட்டின் மொத்த நிலையான செலவு
2. ஒரு மாணவரின் பங்களிப்பு
3. கலந்தாய்வில் 1500 மாணவர்கள் கலந்து கொண்டால் உயர்ந்தபட்சம்
4. ரூ.20 000 ஐ வர்த்தக சங்கம் நன்கொடை அளித்தால் கலந்துகொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை
5. பங்குபெறும் அனைத்து மாணவர்களுக்கும் கூடுதல் வினாத்தாள் ரூ.200 வீதம் மற்றும் வினாத்தாள்கள் அச்சிட கூடுதல் அச்சிடும் செலவு ரூ.100 என்பது கலந்து கொள்ள வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை

12. டிசம்பர் மாதத்தில் ஒரு பெரிய நகரத்தில் உள்ள பாடசாலையின் வருடாந்த கல்விச்சுற்றுலாவை ஏற்பாடு செய்யும் போது பின்வரும் மதிப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது.
    - பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 190
    - சுற்றுப்பயண நாட்களின் எண்ணிக்கை 2
    - பங்கேற்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 10
    - ஒரு இரவில் 40 பேர் தங்கக்கூடிய விடுதிக்கு ரூ.25 0000 செலவிடப்படும்.
    - 5 பேருந்து பயன்படுத்தப்படுகின்றன ஒரு பேருந்துக்கான கட்டணம் ரூபா.80 000
    - நபர் ஒருவரின் ஒரு நாளைக்கான உணவுக்கான செலவு ரூ.1000, தண்ணீர் போத்தல் தொடர்பாக ஒரு நாளைக்கு ரூ.200 ஆகும்.
    - மாணவர்களுக்கான ஒரு சட்டை மற்றும் ஒரு கோப்பைக்கான செலவு ரூ.1500
    - இரவு நிகழ்ச்சிக்கு இசை குழுவுக்கான செலவு ரூபா.100 000
    - முதலுதவி பொருட்களின் தொடர்பாக ஒரு நாளைக்கு ரூ.50 வீதம் 2 நாளைக்கு ரூபா.100
    - ஆசிரியர் தொடர்பான செலவுகள் அனைத்தும் மாணவர்களின் செலவில் உள்ளடக்கப்படும்.

    வேண்டப்படுவது,

    1. நிலையான கிரயம்
    2. மாறும் கிரயம்
    3. ஒரு மாணவனுக்கான கிரயம்
    4. அலகுக்கான கிரயம்
    5. ரூ. 95 000 பாடசாலையின் வணிக சங்கத்தால் நன்கொடை வழங்கப்படுமாயின் ஒருவருக்கான கிரயம் யாது?

BUSINESS & COMMERCE BRANCH